IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஆற்றல்கள் நோக்கிய சடங்குகளில் வேலன் வெறியாடலின் சிறப்பு

**மேரிமாகிறேற் சூசை & முனைவர்.லட்சுமி ராமசாமி**
**இசை மற்றும் நுண்கலைத் துறை**
**வேல்ஸ் பல்கலைக் கழகம், சென்னை**

ஆய்வுச் சுருக்கம்

மக்கள் தம் வாழ்க்கை ஓட்டத்தில் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் பல சக்திகளை- ஆற்றல்களை சந்தித்துக் கொள்கின்றனர். இவ்வாற்றல்களுள் சில ஆற்றல்களை தம்முடன் இணைத்துக்கொண்டும் சில ஆற்றல்களை தம்மிடம் இருந்து விலக்கியும் வாழமுற்பட்டனர். இவை பற்றிய பதிவுகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. ஆற்றல்களை தங்களுடன் சமரசமாக்கவும், அவற்றை சாந்திப்படுத்தவும் வேலன் வெறியாடல் உட்பட்ட பல சடங்குகள், விரதங்கள், பரிகாரங்கள் என காலத்திற்கு காலம் மேற்கொண்டு வந்தனர். இவற்றில் இருந்து அக்கால மக்கள் வாழ்க்கையில் அவர்கள் அறிவிற்கு எட்டாத ஆற்றல்கள் எல்லாம் அவர்களுக்கு சவாலாக அமைந்திருக்க வேண்டும் என அறிந்து கொள்ள முடிகிறது. அக்கால மக்கள் ஆற்றல்கள் மேல் கொண்டிருந்த நம்பிக்கைகள் அதற்கான பரிகாரங்களின் சாதக பாதகமான நிலமைகளும், அவற்றுள் வேலன் வெறியாடல் சிறந்து இருப்பது பற்றிய எண்ணக் கருத்துகளை மையப்படுத்தி இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

ஆற்றல்கள், விரதங்கள், பரிகாரங்கள், வேலன் வெறியாடல், ஆற்றல்களின் உறைவிடங்கள். சமூக ஒழுங்குவிதிகள்.

## முன்னுரை

மக்கள் அன்றும் இன்றும் தம்மை மீறிய அல்லது தம் கட்டுப்பாட்டிற்கு அடக்கிக் கொள்ள முடியாத ஆற்றல்களை, அறிவுக்கு எட்டாத புதிராக விடைகாண முடியாத ஒன்றாக கருதும் இடங்களில் கேள்வி இன்றி கடந்து செல்கின்றனர். அல்லது அதனுடன் ஒப்புரவாவுதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஆற்றல்களை வசப்படுத்த மந்திர தந்திர முயற்சிகளின் தொடர்ச்சிகள் அன்றிலிருந்து இன்றுவரை நடந்து கொண்டுதானிருக்கிறது. இதன் நீட்சியை இந்திய துணைக்கண்டம் மட்டுமல்லாமல் உலகத்தின் பண்டைய நாகரீகங்களிலும் காணக்கிடக்கிறது. பல ஆற்றல்கள் புனித ஆற்றல்களாக மக்களிடையே பேணப்பட்டது. அவை கட்டு மீறும் பொழுது மக்கள்அவற்றை அச்சுறுத்தும் ஆற்றல்களாக இனங்கண்டுகொண்டனர். ஆற்றல்களை அனுகூல ஆற்றல்கள், அனுகூலமற்ற ஆற்றல்கள் என இனம் பிரித்துக் கொண்டனர் . தமக்கு விடை தெரியாதவற்றிற்கு விடை தேடியும்,

பாதுகாப்புத் தேடியும் ஆற்றல்களை வணங்கிக் கொண்டனர். சில ஆற்றல்களை உருவப்படுத்தி தெய்வமாக கை யெடுத்து வணங்கிக் கொண்டனர். அதற்கென சடங்குகள் பரிகாரங்களை மேற்கொண்டனர். அந்த வரிசையில் விரதங்கள், விரிச்சி கேட்டல், பிறை வழிபாடு, வேலன் வெறியாடல் போன்ற சடங்குகளும் பரிகாரங்களும் அமைந்தன. சங்க இலக்கியங்களில் 'வேலன் வெறியாடல்' ஏனய சடங்குகளை விட அதிகளவில் பரவலாக பேசப்பட்டுள்ளது. அக புற மரபுகள் இரண்டிலுமே இத்தகைய ஆற்றல்கள் மேல் மக்கள் கொண்ட நம்பிக்கைகளினால் அவர்கள் மேற்கொண்டிருக்கும் சடங்குகள், பரிகாரங்களை காணமுடிகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒன்றியிருந்த சில ஆற்றல்களும் சடங்குகளுமே இவ்வாய்வுக் கட்டுரையில் நோக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் கூறும் அனைத்து ஆற்றல்களும் அதற்கான சடங்குகளும் இங்கு ஆராயப்படவில்லை என்பதை கருத்திற் கொள்ளவும்.

**ஆற்றல்களும் உறைவிடங்களும்**

ஆற்றல்கள் சூர், சூர்மகள், பேய்மகள், அணங்கு என பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது. ஆற்றல்களின் வெவ்வேறுபட்ட தன்மைகள், செயற்பாடுகள் குறித்தும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளதை காணமுடிகிறது. திரண்டிருக்கும் படை அணங்கைப் போல் அச்சமூட்டுவதாகஅமைகிறது. (புறம்:362). ஆற்றல்கள் தீமைகளை அழிக்கும் சக்தியுடையதாக கூறப்படுகிறது (குறுந்: 87). வலி தரத்தக்க நோவத்தக்க எதுவாயினும் அவற்றுள் கடவுள் தன்மை உறைந்துள்ளதாக சுட்டப்படுகிறது ( அகம் 166). இக் கூற்றை நோக்கும் போது ஆற்றல்கள் பற்றிய பார்வையும் அதன் தொடர்ச்சியும் முழுமையான அளவு எமது சமூகத்தினை ஆக்கிரமிக்காவிடினும் அதன் பாதிப்புகளின் தொடர்ச்சி இன்றளவும் தொடர்வதைக் காணமுடிகிறது. இவை மன்னன்(பதிற்:13), பெண்( அக :07), நீர் நிலைகள்(ஐங்.28), மலை(குறுந்.105), மரங்கள்(குறுந்.87). இசைக்கருவிகள்(அகம்:115), நடுகற்கள் ( புறம்:306), என உயிருள்ள உயிரற்ற இரண்டு இடங்களிலும் உறைந்திருப்பதாக நம்பினர். மன்னர்களிலும் பெண்களிலும் இருவகையான ஆற்றல்களும் உறைந்திருந்ததாக இலக்கியங்கள் அறியத்தருகின்றன.

**இசைகருவிகளின் ஆற்றல்களும் அதற்கான சடங்குகளும்**

முரசுகள், துடிகள், யாழ்கள் போன்றவற்றில் ஆற்றல் உறைந்துள்ளதாக நம்பினர். பாணனின் யாழில் கடவுள் அணங்கு உறைந்துள்ளதாக கருதப்பட்டது (அக .115). முரசுகள் துடிகள் போர்வீரரை திரட்டவும், அவர்கள் போர்க்குணங்களை வீறுகொள்ளச்செய்ய துணை நின்றது (புற.பொ.வெ கரந். 29,30 ; புறம்.260,287). இவைகளின் ஒலியானது பகைவரின் அழிவிற்கும் காரணமாகிறது(பத்ற்:75). எனவே இதன் பயன்பாட்டிற்கு முன்னும் பின்னும் இவற்றிற்கான சடங்குகளையும் பரிகாரங்களையும் செய்தனர். போர்க் காலங்களில் முரசுகளை, துடிகளை நீராட்டி, பூ இட்டு பரிகாரங்களும் செய்தனர்.

இன்றய உலக நடப்பில் இக்கருவிகளின் பயன்பாடு உபயோகத்தில் இல்லாததால் சில கோவில்களிளும் அருங்காட்சி அகங்களிலும் இவை காட்சிப் பொருளாகமட்டுமே காணக்கிடக்கின்றன. இதற்குமேல் இன்று இதன் பெருமைகளை கண்டு கொள்ளமுடிவதில்லை.

**மன்னனும் ஆற்றல்களுக்கான சடங்குகளும்**

நாட்டை ஆளும் மன்னன் ஆற்றல்களின் மையப்பொருளாக விளங்கினான். மன்னன் நீதி தவறும் பொழுது, தன் நாட்டை காப்பாற்றத் தவறும் பொழுது மன்னனின் அனுகூலமான ஆற்றல்கள் கட்டவிழ்க்கப்பட்டு அனுகூலமற்ற ஆற்றல்களாக உருமாற்றமடைகிறது. மன்னனின் ஆற்றல்களின் வலிமை குன்றும் பொழுது நாட்டில் வறட்சியும், பகைவரின் எதிர்வினைகளும் நாட்டினுள் நுழைகின்றன (பதிற்.13). சங்க இலக்கியங்களில் போர்ச்செயல்கள் வேளாண்மையுடன் ஒப்பிடப்படுகிறது(புறம்.275,19,368). ஒரு மன்னன் உழவினால் ஒரு நாட்டின் உணவுப் பற்றாக்குறையை தீர்த்து, மக்களுக்கு வளமான வாழ்வு கொடுக்கிறான். போரின் மூலம் நாட்டின் பாதுகாப்பை தக்கவைத்துக் கொள்கிறான்.

மன்னன் தன் நாட்டின் பாதுகாப்பையும், வளங்களையும் கருத்திற்கொண்டு, தன் பகை மன்னனைக் கொன்று அதிக சேதத்தை அந்நாட்டிற்கு ஏற்படுத்துகிறான். அவன் பகைநாட்டின் நகரப்பகுதிகளை நாசப்படுத்தி அங்கு எள்ளு, கொள்ளு போன்றவற்றை விதைத்து அறுவடைசெய்கிறான் (புறம். 370). மன்னன் பகை மன்னனை கொன்றதனால் தனக்கு தீங்கு வரக்கூடும், அதனால் தன் நாட்டுக்கு அபாயம் எனக் கருதி இறந்த மன்னனுடன் ஒப்புரவாகும்படி, பரிகாரச் சடங்கினைச் செய்து பகை மன்னன் ஆற்றலையும் தன்னுடன் இணைத்துக் கொள்கிறான். வேளாண்மையில் புது அறுவடை நேரம் தானம் கொடுப்பது போல் இங்கும் தானம் கொடுத்து, போர்த்தியாகம் என்னும் பரிகாரத்தை செய்கிறான்.

உண்மையாக இந்நிகழ்வு இங்கு எவ்வளவு சாத்தியமாகும் என்பது ஒரு கேள்வியாக அமைகிறது. இறந்த ஒருவருடன் உயிரோடிருக்கும் ஒருவர் எப்படி ஒப்பந்தம் செய்யமுடியும்? எப்படி ஒப்புரவாக முடியும்? ஒரு மன்னன் தானும் தன்படைகளும் செய்த நாச காரியங்களுக்கு, தங்களுக்கு சமாதானம் தேடிக்கொள்ளும் சடங்கு போலவே இந்த பரிகாரங்கள் அமைகின்றன. இங்கு சமூகத்தை நோக்கிய பயன்களினை காணமுடியவில்லை. போர்களும் பூசல்களும் இன்றுவரை தொடர்ந்தாலும் இத்தகைய சடங்குகளும் பரிகாரங்களும் அன்றய காலத்துடனே காணாமல் போய்விட்டன.

மன்னர்களுக்கும் ஆற்றலுக்கும் இடையிலான அடுத்தவொரு சடங்கு தற்கொலைச் சடங்காகும். மான இழப்பை அடைய நேரும் மன்னன் மரணிக்கும்வரை உணவு மறுத்து மேற்கொளும் சடங்காகும் (புறம்.65 ; அகம்.65) இதில் இவனைச் சார்ந்த உறவினர்களும் இணைந்துகொள்வர் (புறம்.218,2199) இச்சடங்கு வடக்கிருத்தல் என அழைக்கப்படுகிறது.

அவமானத்திற்கு பயந்து வாழ்வை முடித்துக்கொள்ளும் நிகழ்வாக இது அமைகிறது .

**நடுகற்களின் ஆற்றல்களும் வணக்கங்களும்**

இது ஒரு வீரனுக்கு அவன் போர்க்களத்தில் செய்த வீரதீர்ச் செயல்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக அவன் நினைவாக நடுகற்கள் அமைந்தன. அந்த கற்களில் அவனது பெயரும் புகழும் பதியப்பட்டிருந்தது(ஐங்.352). நடுகற்களில் ஆற்றல்கள் உறைந்துள்ளதாக மக்கள் நம்பினர். (அகம்.35). நடுகற்களுக்கு மாலையிட்டு, மயிற் தோகை சூட்டினர். கூடவும் பறை முழங்கி மறியாட்டின் குருதியைக் கலந்து சோற்றையும் தூவி வணங்கினர். நடுகற்களை கடந்து போவோரை அதை வணங்கி செல்லும்படி பணிக்கப்படுவதை ஒருபாடல் வலியுறுத்துகிறது (புறம்.335)

சமூகத்தை நோக்கிய பயன்பாடு என்று பார்த்தால் அன்றய நிலையில் வீரன் ஒருவனின் வீரச்செயல்களின் பதிவாகக் கொள்ள முடிகிறது. கல்லறைகள் இறந்தவர்களை நினைவு கூரும் சடங்குகளின் இன்றைய வரையிலான தொடர்ச்சியை இந்திய, இலங்கை நாடுகளில் இதை ஒரு சில வகுப்பினரிடம் கண்டுகொள்ள முடிகிறது. இன்றும் 8ம் நாள், 31ம் நாள், வருடாந்திரநாள் என இறந்தவர்களை நினைவுகூர்ந்து கொள்வர். அத்தினங்களில் இறந்தவர்கள் விரும்பிய உணவுகளை படைத்துக்கொள்வர். இத்தகைய தினங்களும் இரண்டாம் மூன்றாம் தலைமுறைகளுடன் மறக்கப்பட்டு விடுகிறது.

**பெண்களின் ஆற்றல்களும் அவற்றிகான சடங்குகளும்**

சங்க இலக்கியங்களில்அணங்கு என்னும் சொல் பெண்ணை வருத்தும் நோயாகவும், அவளைச் சார்ந்தர்களை வருத்தும் செயலாகவும் பல இடங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் பதின்மப் பருவங்கள், திருமணப் பருவம், விதவையாகும் காலம் போன்ற அவளது வாழ்க்கையோட்டத்தில் அவள் கடந்து வரும் சமூகக் கட்டுப்பாடுகள், பரிகாரங்கள், சடங்குகள் பலவாகும். அவளிடம் குடி கொண்டிருக்கும் ஆற்றல்களின் தாக்கங்கள் அவள் உடல் மாற்றங்களிருந்து மாத்திரமன்றி வெளியில் இருந்து வரும் புறக்காரணிகளாலும் ஏற்படுகின்றன.

பெண்களின் பருவத் தோற்றப்பாட்டின்மேல் அக்கால சமூகம் கொண்ட பார்வையினை சங்கப் பாடல்கள் ஊடாக நோக்குவோம். உடன் போக்கான தன் வளர்ப்புமகளை எண்ணி, பிரிவாற்றாமையால் வருந்துவதாக செவிலிக் கூற்றாய் கீழ்வரும் பாடல் அமைகிறது. ஒரு பெண் பருவம் எய்தும் போது அவள் மேல் சமூகத்தின் பார்வை எப்படி இருந்தது என்பதைஇப்பாடல் விளக்குகிறது.

``முலை முகம்செய்தன; முன் எயிறு இலங்கின;

தலை முடிசான்ற; தண் தழை உடையை

...................

துய்த் தலை வெண் காழ் பெறூஉம்

கல் கெழு சிறுகுடிக் கானவன் மகளே. ''

(அகம்.07)

அவளது மார்பகம் வளர்ச்சியுற்றுள்ளது. அவளுடைய கூரிய பற்கள் மின்னுகின்றன. அவளது கூந்தலோ நன்கு வளர்ந்துள்ளது. குளிர்மையான தழையிலான ஆடைகளை உடுத்தியுள்ளாள்.
சுற்றி திரியும் உன் தோழியருடன் எங்கும் செல்லாதே. பழமை வாய்ந்த ஊர்களில் தாக்கி வருத்தும் தெய்வம் உள்ளது, எனவே நீ காவலுக்கு உட்பட்டிருக்க வேண்டும். வீட்டின் வாசல் வரைக் கூட செல்லக் கூடாது நீ பேதைப் பருவத்தினள் அல்ல (சிறுமியல்ல). அதைத்தாண்டி பெதும்பைப் பருவத்தை அடைந்து விட்டாய் என பெண்ணின் பருவத்தின் வளர்ச்சியினை இப்பாடல் கூறுகிறது. ஒரு பெண்ணின் பருவமாற்றத்தால் அவள் மேல் கவனிப்பு அதிகமாகிறது. அது போல் காவலும் மிகுதியாகிறது. இதை இன்றும் நம் நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகிறது. கிராமப்புறங்களில் காத்துக் கறுப்பு அண்டும் எனக் கூறி மாலை வேளைகளில் இளம் பெண்களை தனித்து அனுப்புவதை தவித்துக்கொள்வர். தெருவில் சிறுவர்களுடன் விளையாடுவதை நிறுத்தி வைப்பர். மார்பில் மாராப்பு போடுவது வரை ஆடை அணிகலங்களிலும் அதிக கவனம் செலுத்துவர்.

பெண்ணின் அழகு ஆடவனை கவர்வது அவனை மோகத்திற்கு உட்படுத்தி வருத்தும். பெண்ணின் உடல்பகுதிகளில் எந்தப்பகுதிகள் மற்றவர்களை கவர்ந்து வருத்தும் என்பதை மிக மரியதையான, அசௌரிகம் இல்லாத முறையில் இலக்கியங்களில் பதியப்பட்டுள்ளது(அகம்.161; நற்.9; ஐங்.363). அணங்கு பெண்ணின் மார்பகத்தில் உறைந்துள்ள அளவைவிட, அல்குல் பகுதிகளில் குறைந்தளவே உறைந்துள்ளதாக தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. (குறுந்.337)

அணங்கு அணுகும் என்று சொல்லி அவள் தன் இச்சைகளை அடக்கி வாழ பயிற்றுவிக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கான பெண்ணின் மேல் திணிக்கப்பட்ட சமூக விதிகளாகவே, சில இடங்களில் இப்பரிகாரங்களைக் கண்டுகொள்ள முடிகிறது.

பருவம் எய்திய பெண்களை அணங்கு ஆட்கொள்ளும் என நம்பப்பட்டது. அணங்கு பெண்ணை அணுகாமல் இருக்க அவளுக்குகென ஆடை அலங்காரங்களில் சில விதிகள் நிர்ணயிக்கப்பட்டு, அவளுக்கு வழங்கப்படுகிறது. அணங்கு அணுகாமல் சில பரிகாரங்களாக இவை இருந்தாலும் அவள் பருவ அழகு, அவளையும் அவளைச் சார்ந்தவர்களையும் வருத்தாமல் இருக்க புலன்களத் தடுக்கும் முயற்சியாகவே இந்த அலங்காரங்களும் பரிகாரங்கள் தெரிகிறது.

முருகனுக்கு கோவில் எடுக்கப்பட்டமை குறித்தும் (அக.138) அக்கோவிலுக்குள் தூய்மையற்றவர்கள் நுழைவது, அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதாய் அமையும் என்பது குறித்தும் அறிய முடிகிறது (புற. 299) பாடல் போர்களில் தோற்கடிக்கப்பட்ட குதிரைகள், மாதவிலக்குற்ற பெண்கள் முருகன் கோவிலிலுள் கலங்களைத் தொட முடியாது அஞ்சி நிற்பதைப் போன்று நின்றன எனச் சுட்டுகிறது. பெண்கள் மாதவிடாய்க் காலங்களில்

கோவிலுக்கு நுழைவதும், அவளது தொடுகைகளும் தவிர்க்கப்பட்டிருப்பதாக பாடல் குறிப்பிடுகிறது. அகம். 7 வது பாடலில் பூப்பெய்திய பெண் கடவுள் தங்கும் இடத்திற்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறாள் தவிரவும் அக்காலங்களில் பெண்கள் பலவீனமானவர்களாகவும், சுத்தம் இல்லாதவளகவும் கருதப்பட்டமையும் இப்பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இவ்விதி முறைகள் இன்றுவரை நம்மத்தியில் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

திருமணங்களில் பெற்றோரின் ஒப்புதல்களும், அபிப்பிராயங்களும் இலக்கியங்களில் அழகாகப் பதியப்பட்டுள்ளன. பெண்களை மணமுடித்து தர மறுப்பதனால் போரும் பூசல்களும் இருசாரார்களிடையே உருவாகிறது. இது பற்றிப் புலவர் பெண்ணை பெற்ற தாயை பழித்துரைத்து விதந்துரைக்கும் பாடல் இடம் பெற்றுள்ளது(புறம்.336). முசிறி நகரை ஒத்த செல்வம் தந்தாலும் கூட தன் பெண்ணை மணமுடித்து தர தந்தை மறுத்துரைக்கும் பாடல்களும் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது(புறம்.353, 352). பெற்றொரின் ஒப்புதலைப் பெறமுடியாத தலைவன், தலைவி உடன்போக்கு செல்கிறார்கள். பெற்றோரால் நிச்சையிக்கப்பட்ட அல்லது ஒப்புதல் பெற்ற தலைவனும் தலைவியும் திருமணச் சடங்குகளால் இணைக்கப்படுகின்றனர்.

திருமணப் பந்தத்தால் கணவனுக்கு ,மனைவியின் நடத்தையைப் பொறுத்து ஆற்றல்களின் நன்மை தீமைகள் அவனை வந்தடைகிறது. பெண்ணின் கற்புநெறியானது திருமணத்திற்கு முன்பு அவளது பெற்றோருக்கு வலிமை சேர்க்கிறது. திருமணத்திற்கு பின்பு அவளது கணவன் மற்றும் பிள்ளைகளுக்கு வலிமை சேர்க்கிறது.

பெண்ணின் கற்பு நெறி தன்மையினால் அவள் தெய்வங்களுடன் ஒத்து நோக்கப்படுகிறாள் (அகம்.162,198). அருந்ததியை (வடமீன்) ஒத்த கற்புநேறி கொண்ட மனைவியினால் காரி மன்னனுக்கு பெருமிதம் என கற்புநெறியினை விண்மீனின் நிலைக்கு உயர்த்தி கூறப்பட்டுள்ளது(புறம்.122). இலக்கியங்களின் பதிவுகளில் இருந்து கற்புநெறிகள் பற்றியஉயரிய எண்ணப்போக்கு இங்கு தெளிவாகிறது.

மகப்பேற்றுக் காலங்களிலும் பெண்களை பேணுவர். ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கு பின்பு குளித்தலுடனான சுத்திகரிப்புச் சடங்குகளை பெண்களுக்கு மேற்கொள்ளுவர். இக்காலத்தை தொடக்கு (தீட்டு) காலமாகக் கருதுவர். தொடக்கு கழிக்கும் சுத்திகரிப்பு சடங்குகள் எம்மத்தியில் இன்றுவரை தொடர்கிறது. மகப்பேற்று காலங்களில் கணவரிடம் இருந்து தாய், சேயினை பிரித்து பேணிக்கொள்வர். இக்காலங்களில் இயற்கையின் வழியில் பேணல்களும் பரிகாரங்களும் தாய்க்கும் சேய்க்கும் தேவையாகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் முதன் முதல் தந்தை, குழந்தையைப் பார்க்கும் நிகழ்வினை ஒரு சடங்காக நிகழ்த்திக்கொள்வர். இதற்குப் பின்னணியில் சில காரணங்கள் முன்வைக்கப்படும் (புறம்.100). குழந்தையின் வளர்ச்சிக்கு உளவியல் தாக்கங்கள்களை (வீர உணர்வுகளை) அளிக்கும் சடங்குகளாக இவை அமைகிறது.

அன்றைய சமூகத்தில் கணவனை இழந்த மனைவி மிகக் கடுமையான சுயக் கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டும், அல்லது கணவனுடன் அவள் மரணிப்பதாக குறிக்கப்பட்டுள்ளது. தனது கணவனுடன் மரணிக்காத விதவைகள் தமது கற்பை காத்துக்கொள்ள மிகக் கடுமையான விரதங்களை மேற்கொள்கின்றனர். தம்மை அழகுபடுத்துவதை மறுத்துக்கொண்டு, அணிகலங்களை புறக்கணிக்கின்றனர் (புற,ம். 224, 253, 261). தலையில் முடியை எடுத்துக்கொண்டனர், மொட்டையான தலையில் சேற்றை பூசிக்கொண்டனர் (புறம்.280). கற்படுக்கையில் உறங்கினர்(புறம்.246). யானையின் காலின் அடிப்பாக அளவிலான இடத்தை மெழுகி அதில் புற்களைப் பரப்பி அதில் தங்கள் கணவருக்கு உணவாக பிண்டம் வழங்கி சுவை உணவு தவிர்த்தும் வாழ்ந்தனர்( புறம்.234, 249). விதவைப் பெண்கள் (கணவரைப் பிரிந்திருக்கும் பெண்களும், தங்கள் தலையில்) மலர் சூட்டுவதை தவிர்த்தனர் (புற.242).

ஒரு பெண் தன் சுய கட்டுப்பாட்டை மீறுவது அவளது அதீத ஆற்றலை வெளிக்கொணர்ந்து சமூகத்திற்கு தீமை விளைவிக்கக் கூடும் என்ற அச்சுறுத்தலை இலக்கியங்களூடாக அறியக்கிடக்கிறது. கண்ணகியின் கணவன் கோவலன் இறந்தவுடன் அவளது ஆற்றல் அவள் கடுப்பாட்டை மீறி அச்சுறுத்தும் ஆற்றலாக வெளிப்பட்டு மதுரை நகரைத் தீக்கிரையாக்குகிறது (சிலம்பு.23,24). மேற்கூறப்பட்ட நிலைகளில் இருந்து பெண்ணின் இருவகை ஆற்றல்களின் தன்மைகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தப் பரிகாரங்களும் விரதங்களும் இதுவரையிலான பெண்கள் ஒடுக்கு முறைக்கு வழிவிட்டுவந்த பரிகாரமாகவே தெளிவு கொள்ள முடிவதால், பெண்களின் புலன்களை அடக்கி ஒடுக்கு முறைக்கான விரதங்களாகவே இதைக் கண்டுகொள்ள முடிகிறது.

தலைவியானவள் தலைவன் காதல் பிரிவினால் துன்பப்படுகிறாள். அவளின் வருத்தம் அறியாத செவிலியும் நற்றாயும் அணங்கு அவளை அணுகியதாக எண்ணி கொள்கிறனர். பெண்ணின் நிலைமை அறிந்து கொள்ள வேலனை வருவித்து `குறி' அல்லது `கழங்கு' பார்த்துக்கொள்கிறாள். மற்றுமொரு பாடலில் புதுமணல் தருவித்து, விழாக்கோலம் பூண்டு, மறியறுத்து படையல்களும், பலியும் இட்டு வேலன் வெறியாடல் மேற்கொள்ளப்படுகிறது(அகம்.242). தலைவியை அணங்கின் பிடியில் இருந்து குணப்படுத்த மேற்கொண்ட இச்சடங்கானது, தலைவியை களவு நெறியில் இருந்து கற்புநெறிக்கு வழிப்படுத்தி வைக்கிறது.

நாட்டு வளம் வேண்டும் விழாக்கள் (திரு.227-244 ; பட்டின. 156-158.), போரின் சாதக பாதகமான நிலைகளை அறிந்து கொள்ளவும், போர்களில் வெற்றிபெற வேண்டியும் (வள்ளிக் கூத்து), பிறரின் மனக்குறிப்புக்களை அறிந்து கொள்ளவும்(அகம்.195: 1-19) என பல காரண காரியங்களுக்காக வேலன் வெறியாடல் சடங்குகள் நிகழ்த்தப்பட்டன.

**வேலன் வெறியாடல் சடங்கின் சிறப்பு**

வேலன் வெறியாடல் மூலம் செய்யப்படும் பரிகாரம் இயற்கையை ஒட்டிய ஒன்றாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. கடவுளை வருவித்துக் கொள்ளும் சமயச் சடங்கியல் சார்ந்த நிகழ்வாக அமைகிறது. மக்களுக்கு பல வழிகளில் நம்பிக்கையைக் கொடுக்கிறது.

வேலன் வெறியாடல் தலைவியை குணப்படுத்த, அணங்கைப் போக்க மேற்கொள்ளப்பட்டாலும் பெண்ணின் உண்மை நிலை அறிந்து அவளை களவியலிருந்து கற்பியலுக்கு நகர்த்திச் செல்லுவதற்கு வேலன் உதவுகிறது.

பல பாடல்களின் பதிவில் இருந்து வெறியாடலை முழுமையாக ஈடுபாட்டோடு பெற்றோர், தலைவி தோழியர் செய்வதற்குரிய நம்பிக்கையை அவர்களுக்கு கொடுத்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.வேலன் தன் நிலை அறியான் என தோழியும் தலைவியும் ஒரு சில பாடல்களில் சந்தேகத்துடன் கூறிய போதும் அவர்கள் அறத்துடன் நிற்க வெறியாடல் உதவுகிறது (அகம்.98).களவு நிலையிலிருந்து இருந்து கற்பு நிலைக்கு நகர்த்தப்படுத்தலுக்கான முடிவுகளுக்கு இச்சடங்கு பொறுப்பேற்கிறது.

நாம் ஒரு செயலை தன்னிச்சையாகச் செய்வதற்கு நமக்கு கிடைக்கும் வெளி உந்துதல்கள் அவற்றை நலம்பட செய்ய உதவுகிறது. வேலன் வெறியாடலும் அக்கால மக்கள் வாழ்விற்கு ஒரு உந்து சக்தியாக செயல் பட்டது

தம் மகளின் நிலை எப்படியாகுமோ என மனம் கலங்கி இருந்த பெற்றொருக்கு வேலன் வெறியாடல் ஒரு திசைகாட்டியாக நம்பிக்கையை ஊட்டி நிற்கிறது. தலைவன், தலைவி, தோழிக்கு மட்டுமே தெரிந்திருந்த களவு உறவின் ரகசியங்கள் வேலன் வெறியாடல் மூலம் நாகரீகமான முறையில் சமூகத்திற்கு வெளிக்கொணரப்படுகிறது. என்றே சொல்லலாம். தாமாக வெளிபடுத்த முடியாத இக்கட்டான சூழ்நிலைக்கான காதல் சங்கடங்கள் தவிர்க்கபட்டு, வேலன் வெறியாடல் மூலம் வெளிக்கொணரப்படுகிறது. சமுதாயத்திற்கு

முன் வைக்கப்பட பயந்து இருளுக்குள் உலவிய களவுறவுகள் இங்கிதமாக சுமுகமான முறையில் வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டப்படுகிறது.

விரும்பப்படாத திருமணச் சம்மந்தங்களின் போரும் பூசல்களும் தவிர்க்கப்பட்டு வெறியாடலால் சுமுகமாக தீர்க்கப்படுவதாக எண்ணமுடிகிறது . நோய் தீர்க்கும் மருத்துவர் போலவும், உள நோய் தீர்க்கும் உளவியலாளர் போலவும் வெறியாடல் செயற்பட்டுள்ளது . சொல்லப் போனால் அன்றய சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பும் நம்பிக்கையை ஊட்டும் பெட்டகமாகவே வெறியாடல் திகழ்ந்திருக்கிறது என்றால் மிகையாகாது.

அகமரபில் மாத்திரமன்றி, புறமரபிலும் வேலன் வெறியாடல் சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளது. வேலன் வெறியாடல் சடங்குகள் காரண காரியங்கள் நோக்கி அச்சம் கொள்ளவைக்கும் தோற்றத்தைச் கொடுக்கிறது. இருந்தும் அதன் பின் விழைவுகள் மகிழ்வையும், சிறப்பையும் சமூகத்திற்கு கொடுக்கும் நிகழ்வாக முற்றுப்பெறுகிறது. ஏனைய பரிகாரங்களையும் சடங்குகளையும் ஒத்து நோக்கும் போது மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்த ஒரு சடங்காகவே இதைக் காண முடிகிறது.

ஒரு கலை நிகழ்வு தன் கருத்தை பார்வையாளருக்கு கடத்தி ஓர் ஊடகமாக செயற்படுகிறது அது போன்று வேலன் வெறியாடல்களும் அன்றய நிலைத் தேவைகளுக்கேற்ப சமூகத்திடம் கருத்துக்களை கடத்தி ஓர் ஊடகமாக செயல்பட்டுள்ளது.

சமூகத்திற்கு பயன் தரும் பல அம்சங்களை தன்னகத்தே கொண்ட அமைப்பில் ,வேலன் வெறியாடல் இயங்கியுள்ளது. ஏனைய ஆற்றல்களுக்கு நிகழ்த்தப்பட்ட பரிகாரங்கள் சடங்குகளை விட மேன்மை நிலையில் வேலன் வெறியடல் இருந்திருப்பதைக் காணமுடிகிறது.

முடிவுரை

ஆற்றல்கள் மக்களிடையே பேணப்பட்டுள்ளது. மக்களால் நம்பப்பட்ட இயற்கை ஆற்றல்கள் தவிரவும், மனிதரிடம் இருந்து எழும் உணர்வுகளின் தாக்கங்களாலும் புறக்காரணிகளின் தூண்டுதல்களாலும் அனுகூல, அனுகூலமற்ற ஆற்றல்களாக ஆற்றல்கள் வெளிப்படுவதை காண முடிகிறது, அவற்றை ஒழுங்கு நிலையில் வைத்துக் கொள்வதற்காக அக்கால மக்கள் விரதங்கள். பரிகாரங்கள், சடங்குகள், ஒழுக்கவிதிகளை நிறுவிக்கொண்டனர்.

இவ்வாற்றல் சமூகத்தை பாதித்துக் கொள்ளலாம் என்பதற்கென்றே பெண்களை நோக்கி அமைந்த சில விதிகள் அன்றய சமூகத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம், என கருத ஏதுவாக உள்ளது.

தான் செய்து கொண்ட நாசவேலைகளின் மனஉறுத்தலைத் தவிர்க்க சாந்தி செய்யும் முறையாக மனித உணர்வுகளுக்கு வடிகால்களாக, போர்த்தியாகங்கள் நடந்தெறியதாக எண்ணத்தோன்றுகிறது. தம் மத்தியில் வாழ்ந்து மடிந்த போர்வீரனின் வீரச் செயல்களுக்கு மரியாதை கொடுக்கும் விதமாக நடுகற்களுக்கான வணக்கங்கள் அமைந்தது.

வெறியாடல் என்பது ஒரு நோய்க்கு பரிகாரம் தேடும் சடங்கியல் நிகழ்வாகத் தோன்றி சமூகத்திற்கு நம்பிக்கை தரக்கூடிய செயற்பாடக வளர்த் தெடுக்கப்பட்டிருப்பதை சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வேலன் வெறியாடலின் இன்றய வரையிலான மக்களின் நம்பிக்கையும், அதன் தொடர்ச்சியும் வேலனிடம் இருந்து கிராமத் தெய்வங்களுக்கு இடம்மாற்றப்பட்டு, வழி காணாத வலிகளுக்கு வழிகாட்டும் சடங்காக நம் மத்தியில் வெறியாடல் இன்றும் தொடர்கிறது.

**உசாத்துணை நூல்கள்:**


தொல்காப்பியம் பொருளதிகாரம் – நச்சினார்க்கினியர். சாரதாபதிப்பகம். 2ம் பதிப்பு மார்ச் 2023

புறப் பொருள் வெண்பாமாலை - புலியூர்க்கேசிகன் தெளிவுரை.பாரிநிலையம். மறுபதிப்பு-2019

பத்துப்பாட்டு முதற் பகுதி மூலமும் உரையும் - முனைவர்இரா. மோகன் தலைமைப் பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.மா.பரிமணம் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன். நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு ஏப்ரல் 2004.

புறநானூறு மூலமும் உரையும் – மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையர். டாக்டர்.உ.வே.சாமினாதையர் நூல்நிலையம் ஒன்பதாம் பதிப்பு 2021

அகநானூறு மூலமும் உரையும் - முனைவர். இரா செயபால். தலைமைப் பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.மா.பரிமணம் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன். நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு ஏப்ரல் 2004.

ஐங்குறுனூறு மூலமும் உரையும் – முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. தலைமைப் பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.மா.பரிமணம் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன். நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு ஏப்ரல் 2004.

குறுந்தொகை மூலமும் உரையும் - மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையர். டாக்டர்.உ.வே.சாமினாதையர் நூல்நிலையம் எட்டாம் பதிப்பு 2020

பதிற்றுப்பத்து மூலமும் உரையும் - முனைவர் அ. ஆலிஸ். தலைமைப் பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.மா.பரிமணம் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன். நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு ஏப்ரல் 2004.

சிலப்பதிகாரம் மூலம் உரை – உரையாசிரியர் நாவலர் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார். முல்லை நிலையம் மறுபதிப்பு 2018..

தென்னிந்திய கிராம தெய்வங்கள் – ஆசிரியர் மாமறைத்திரு கென்றிக் ஒயிட்ஹெட் தமிழில் வேட்டை .எஸ். கண்ணன். சந்தியா பதிப்பகம் இரண்டாம் பதிப்பு 2016.

தமிழ்ச் செவ்விலக்கியங்க்கள் அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சயலும் – ஜார்ஜ் எல்.ஹார்ட் தமிழில் பு . கமலக்கண்ணன். நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ், முதல் பதிப்பு ஆகஸ்ட் 2022

பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்- ஆசிரியர் க. கைலாசபதி. காலச்சுவடு பதிபகம். நாங்காம் பதிப்பு - 2023

நேர்காணல் - முனைவர் சே.இரகுராமன் மார்கழி 2023